**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 59/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 பிச்சைமுத்து - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதி வாதி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) வழக்கில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக குடியிருக்கிறேன் என்றால் சுமார் 40, 50 வருடங்களாக குடியிருக்கிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் முன்பு அரசு பணியில் ஆண் செவிலியர் உதவியாளராக இருந்தேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் பழைய SSLC படித்துள்ளேன். நான் குடியிருப்பது மருதூர் கிராமம், தெற்கு 2 ஆகும். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் மருதூர் கிராமத்தில் உள்ளது. நான்தான் வழக்கறிஞருக்கு இவ்வழக்கிற்கான விபரங்களை சொன்னேன். என் முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். பிரதிவாதியை எவ்வாறு தெரியும் என்றால் எனது பக்கத்து ஊர்க்காரர். அவரை சுமார் 40, 50 வருடங்களாக தெரியும். பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை, பழக்கமானவர். தாவா சொத்திற்கும், நான் வசிக்கும் இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 500 மீட்டர் இருக்கும்.

2) தாவா சொத்து சர்வே எண் 737/2A, அதான் விஸ்தீரணம் 51 செண்ட் நஞ்சை நிலம் ஆகும். தாவா சொத்தின் தென்புறம் கிழமேல் ரோடு, மேற்குபுறம் எனது இதர நிலம், கிழக்குபுறம் மல்லிகா, நித்யா, இந்துமதி, விஜயகுமார் ஆகியோர் நிலம், வடக்குபுறம் பொதுப்பணித்துறை வாய்க்கால் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 15.02.1993 ல் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதியது என்றால் பெட்டவாய்த்தலையை சேர்ந்த நாராயணசாமி நாயுடு என்பவர் எழுதினார், அவர் தற்போது உயிருடன் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியபோது யார் உடன் இருந்தது என்றால் P.S.கணபதி கவுண்டர், சுந்தரமூர்த்தி மற்றும் சிலர் இருந்தனர், சரியாக ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் கையெழுத்து போட்டுள்ளது என்றால் பிரதிவாதி சிவக்குமார் கையெழுத்து போட்டுள்ளார், சாட்சிகளாக P.S.கணபதி கவுண்டர், சுந்தரமூர்த்தி இருவரும் போட்டுள்ளனர்.

3) வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய போது நானும், மேற்படி நபர்கள் மட்டும்தான் இருந்தோமா என்றால், எனது தகப்பனார் இருந்தார். எனது தகப்பனார் வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. சாட்சி P.S.கணபதி கவுண்டர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால், தாவா சொத்து உள்ள ஊரைச் சேர்ந்தவர், எனக்கு பழக்கமானவர். சாட்சி சுந்தரமூர்த்தியை எவ்வாறு தெரியும் என்றால் அவர் எனக்கு பழக்கமானவர். சுந்தரமூர்த்திக்கும், எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால், சிறுவயதில் இருந்தே பழக்கம். தாவா சொத்தை நானும், எனது தகப்பனாரும் எத்தனை வருடமாக விவசாயம் செய்து வருகிறோம் என்றால் 1993 ம் வருடம் முதல் செய்து வருகிறோம். நானும், எனது தகப்பனாரும் சேர்ந்துதான் விவசாயம் செய்தோம், எனது தகப்பனார் இறந்த பின்பு நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது தகப்பனார் 2008 ம் வருடம் இறந்தார்.

4) எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பு தாவா சொத்தை பற்றி என்னிடம் சொன்னதாக கூறியுள்ள சங்கதி உண்மையா என்றால் ஆமாம். எனது தகப்பனார் இறப்பதற்கு 4 வருடத்திற்கு முன்பு வா.சா.ஆ.1 ஆவணத்தை என்னிடம் கொடுத்ததாக சொல்வது உண்மையா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு போடப்பட்டுள்ளது என்றால் அதில் எந்த மதிப்பும் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எவ்வளவு காலத்திற்கு எழுதப்பட்டது என்றால் 15.02.1996 வரை 3 வருட காலத்திற்கு எழுதப்பட்டது. அடமானப் பத்திரம் பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்றால் அப்போது அதுபற்றி தெரியாது. தற்போதுதான் தெரியும்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**